ஸ்ரீ

ஸ்ரீராமஜயம்

ஸ்ரீ பிரம்மாண்ட புராணத்தில்

மஹேஸ்வர நாரத ஸம்வாதத்திலுண்டான

ஸ்ரீ ப்ருந்தாவன க்ஷேத்திரமென்னும்

மயிலை

# திருஅல்லிக்கேணி மஹாத்மியம்

மயிலை கொ. பட்டாபிராம முதலியார்

எழுதியது.

சென்னை


ஸ்ரீ வைஷ்ணவ முத்ராக்ஷரசாலையத்தில்

பதிப்பிக்கப் பெற்றது.

1928

ஓம் கேஶவாய நம:

ஸ்ரீ பேயாழ்வார் திருவடிகளே ஶரணம்.



ப்ருந்தாவன க்ஷேத்திரமென்னும்

# மயிலை திரு அல்லிக்கேணி மஹாத்மியம்

விற்பெருவிழவும் கஞ்சனும் மல்லும்
வேழமும் பாகனும்வீழ
செற்றவன் தன்னை புரமெரிசெய்த
சிவனுறு துயர்களை தேவை
பற்றலர் வீயக் கோல்கையில் கொண்டு
பார்த்தன் தன்தேர்முன் நின்றானை
சிற்றவை பணியால் முடிதுறந்தானைத்
திருவல்லிக் கேணிக் கண்டேனே.

## கதாரம்பம்

ஸ்ரீ ஸதாஶிவ மூர்த்தியானவர் ஸ்ரீ கைலாசத்தில் சிவகணங்களும், சித்தகணங்களும், தேவகணங்களும், ரிஷிகணங்களும் புடைசூழ, ரத்னஸிம்ஹாஸநத்தில் கொலு வீற்றிருக்கின்ற சமயத்தில் நாரதபகவானானவர் உமாமஹேசரைப்பார்த்து, ஸ்வாமீ! நீர் சொல்லிக்கொண்டு வந்த பரப்பிரம்ஹ மூர்த்தியான ஸ்ரீமந் நாராயணன் வாசஞ் செய்யும் திவ்யதேச மஹாத்மியங்களைக் கேட்டு மிகவும் ஆனந்தத்தை யடைந்தேன்.

ஆயினும், நான் ருஷிஸிரேஷ்டர்கள் நித்ய வாசஞ் செய்யும் நைமிஶாரண்யத்தைக் கிட்டியபோது, அங்கு ஸப்த ருஷிகளையும் மற்றுமுள்ள ருஷிகளையுங் கண்டேன். அவர்கள் மத்தியில் ஸனத்குமாரர் அஷ்டவசுக்களின் நடுவேயிருக்கும் இந்திரனைப்போல் வீற்றிருந்து மற்ற ருஷிகள்சொல்லும் பகவத்குணானுபவங்களைக்

கேட்டுக் கொண்டிருக்கும் போது சௌனகர் அந்த ஸனத்குமாரரைப்பார்த்து ஸ்வாமீ! முன்னம் ஜம்பூ த்வீபத்தில் கௌமோதகீ தாரியான புராண புருஷனுக்கு நித்திய வாஸஸ்தானங்களான ஸ்ரீரங்கம், வேங்கடாத்ரி, ஹஸ்திசைலம் முதலான நூற்றெட்டுத் திவ்ய தேசங்களென்று சொல்லி இருக்கின்றீரே; அந்த திவ்ய தேசங்களின் வைபவங்களைக் கிரமமாகச் சொல்லவேண்டுமென்று கேட்க; அப்போது ஸனத்குமாரர் சௌனகரைப்பார்த்துக் கிரமமாகச் சொல்லிக்கொண்டு வருகையில் நூற்றெட்டுத் திவ்ய தேசங்களுக்குள் மிகச்சிறப்புற்றோங்கிய திவ்யதேசம் மயிலை ப்ருந்தாவன க்ஷேத்திரமென்றும் அது ஸ்ரீமந்நாராயணனுக்கு வாசஸ்தானமென்றும் ஐஹிக ஆமுஷ்மிக ஸகல புருஷார்த்தங்களையும் கொடுக்கத்தக்கதென்றும், அந்த ப்ருந்தா வனத்திலே விஷ்ணுவிற்கு ஐந்துவிதமான திவ்யமங்கள் விக்ரஹஸ்வரூபங்களுண்டாயிருக்கின்றதென்றுஞ் சொல்லக்கேட்டு அந்தப் பிருந்தாவன வைபவங்களை தேவநீடத்தில் ஸவிஸ்தாரமாகத் தெரிந்துகொள்ளலாமென்று வந்தேனென்று சொன்ன நாரதமுனிவரைப் பார்த்து சிவபிரான் சொல்லுகின்றார்.

வாரீர் நாரதரே! ப்ருந்தாரண்யத்தின் மஹாத்மியத்தையும், அங்கெழுந்தருளி யிருக்கும் ஐந்துவிதமான விஷ்ணு மூர்த்தியின் பெருமையையும், தீர்த்த மஹிமையையும், பிரம்ஹாதி தேவர்கள் ருஷிகள் முதலிய யாவராலுஞ் சொல்லமுடியாதாயினும் பக்தியுடன் கேட்ட வுமக்கு நானறிந்த மாத்திரஞ் சொல்லுகின்றேன், கேளும் என்று சொல்லத் தொடங்கினார்.

## மயிலையின் சிறப்பு.

பூர்வம் நீரறிந்த, நித்யசூரிகளாலும், பிரம்ஹாதி தேவர்கள் ருஷிகள் முதலானவர்களாலும், ஆராதித்துக்கொண்டு வரும்படியான, பூலோகத்திலுள்ள திருநீர்மலையென்னுந் திவ்யதேசத்திற்கு வடகிழக்கான ஈசான்ய திக்கிலே ஓர் ஐப்பசிமாஸம் ஸதயநக்ஷத்ரத்தில் நீர் நிறைந்த ஓர் ஓடையில் செவ்வல்லிப்பூ வொன்றில் திருவவதரித்து, ஓடித்திரியும் யோகிகளான தத்துவதரிசிகளிற் சிறந்தவராய் அனுதியான கேசவனுக்கு அந்தரங்கரான மஹதாஹ்வயர் அவதாரத்திற்கு ஸ்தானமாகியும், நவரத்னகசித

மான மாடமாளிகைகளாலே அலங்கிருதமாகியு மிராநின்ற மயூரநகரியை மூன்றுலோகங்களிலும் ப்ரசித்தமான வ்ருஷபனென்னும், ராஜசிரேஷ்டன் பிரம்ஹாவைத் தபசினலே சந்தோஷிப்பித்து விசுவகர்மாவைக் கொண்டு ஸ்ருஷ்டிப்பித்தான். அந்த பட்டணத்தில் ஷண்முகன், சூத்ரஜன்மாவான மந்தாரகனென்னும் ஒரு ருஷிக்குப் பிரசன்னனுகி அவர் வேண்டும் வரங்களைக்கொடுத்து வாத்ஸல்யத்தாலே ஸ்வர்க்கத்தைப் பார்க்கிலும் மிகவுகந்து வாசத்திற்கு யோக்கியமாய் எப்போதும் க்ரீடத்துக் கொண்டிருக்கிறுன்.

திவ்யகந்த திவ்யரஸ திவ்யபுஷ்ப திவ்ய பலங்களையுடைய ஸாலம், தாலம், தமாலம், ஹிந்தாலம், சம்பகம், நாரிகேளம், புந்நாகம், சூதம், சிந்துவாரம், கந்தபூரம், பீஜபூரம்,தவம், அசோகம், பாடலம், வகுளம், வஞ்சுளம் முதலான வ்ருக்ஷங்களையும், ஸாரஸம், சக்ரவாகம், காரண்டம் முதலான ஜலபக்ஷிகளாலும், விகஸிதங்களாய்த் தாதுகளையுடைத்தான தாமரை செங்குவளை முதலான புஷ்பங்களாலும், நிறைந்து தெளிந்து குளிர்ந்த நீரையுடைய ஓடைகளையு முடைத்தாய் மாயை என்றும், மாதவீ என்றும், மயூரநகரீ என்றும், வைஷ்ணவீ என்றும் மஹரிஷிகளாலே சொல்லப்பட்டதாய்; மயூரநகரீ என்று மூன்றுலோகத்திலும் ப்ரஸித்தமாய் விளங்கிக் கொண்டிருக்கிறது.

அந்த பட்டணத்திற்கு சமீபத்தில் நூறுவிற்கடை தூரத்திற்கு வடக்கே செம்பவள வெண்முத்தம் வெண்திரைகள் வந்துதைக்கும் கடற்கரையோரமாய் அதிமனேஹரமான ப்ருந்தாவனமென்றொருவன மிருக்கின்றது.

## பிருந்தாவனத்தின் சிறப்பு.

அதில் துளஸீவனம் மிகச்செழிப்பாய், நான விருக்ஷங்களாலும், தெளிந்த தீர்த்தங்களாலும் சோபித்து அனேக ருஷிகளாலே சேவித மாயிருக்கின்றது. அதில் ஸ்ரீமந்நாராயணன் தன் திருமேனியை ஐந்துவிதமாகச் செய்துகொண்டு நித்யவாசஞ்செய்கின்றுன். அந்த மூர்த்திகளை சகலமான சேதனர்களும்சேவித்து ஸர்வாபீஷ்டங்களைப் பெறுகிறுர்கள். அங்கு முஹூர்த்தகாலம் வசிக்குமவர்கள் வாஜபேய எக்யபலத்தை யடைகின்றுர்கள். ஸ்வப்னத்

தில் அந்தத் திவ்ய தேசயாத்திரையை நினைத்த போதினும் அந்த பலனை யடைகின்றார்கள். அங்கு வாசஞ்செய்யுந் திரியக்ஸ்தாவரங் களும் பாபம்போய்க் குலவ்ருத்தியாய்ப் பரமபதத்தையடையும். அந்தப் பிருந்தாவனத்தை இருந்த யிடத் திருந்தேனும் நினைக்கு மவர்கள் குடும்ப வ்ருத்தியா யவர்கள் பாகவதாளாய்த் தேஹா வசானகாலத்தில் பரமபதத்தை யடைவார்கள்.

வாரீர் நாரதரே! ஒரு காலவிசேஷத்தில் தேவர்கள் மேருபர்வ தத்தின் சிகரத்திலே யொருகார்யார்த்தமாகச் சேர்ந்திருக்கையில் தேவதைகளில் ரமாபதியும் அடியார்களில் உமாபதியும் ஶ்ரேஷ்ட ரானாப்போலே எம்பெருமானுடைய திவ்யதேசங்களில் அந்த பிருந்தாவனம் சிரேஷ்டமென்று கொண்டாடினார்கள். அந்த சிரேஷ்டமான ப்ருந்தாவனத்தைத் தூஷிக்கின்றவர்களும், ஸ்வ ப்னத்திலும் நினையாதவர்களும் மஹாபாபிகளாகையால் நரகத்தை யடைவார்கள். அந்த பிருந்தாவனத்திலே தாமரை ஆம்பல்கரு நெய்தல் முதலான புஷ்பங்களால் அலங்கிருதமாயிருக்கும் ஶ்ரே ஷ்டமான கைரவிணிசரசான தொன்றிருக்கின்றது. அதிலே ஸ்நானஞ்செய்து சேவித்து ஆசமநீயஞ் செய்கின்றவர்கள், சகல பாபங்களில் நின்றும் விடுபட்டு மோக்ஷத்தை யடைகின்றார்கள். அந்த ப்ருந்தாவன மஹாத்மியத்தை யறிந்து நிர்மலமனஸ்கரளுகி அங்குள்ள கைரவிணி தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து பஞ்சமூர்த் திகளைச் சேவித்துத் தியானிக்குமவர்கள் பாபங்களற்று சமஸ்த காமங்களையும் அடைகின்றார்கள்.

வேதத்தை வேதத்தின் சுவைப்பயனை
விழுமிய முனிவர் விழுங்கும்
கோதிலின் கனியை நந்தனர் களிற்றைக்
குவலயத் தோர்தொழு தேத்தும்
ஆதியை அமுதை என்னையாளுடை
யப்பனை ஒப்பவரில்லா
மாதர்கள்வாழும் மாடமாமயிலைத்
திருவல்லிக் கேணிக் கண்டேனே.

மந்நாதன் (ரங்கநாதன்) வேதவல்லித்தாயர், புஜங்கசயநம், ப்ரணவவிமாநம், கிழக்கே திருமுகமண்டலம், கன்னிகாதானம் செய்து கொடுத்த ப்ருகுமஹரிஷிக்கும் மார்க்கண்டேயருக்கும் ப்ரத்யக்ஷம்.

## மன்னாதன்

## பிருகுமஹருஷிக்கு ப்ரத்யக்ஷமாதல்

வாரீர் நாரதரே! அந்த பிருந்தாவனத்தில் வாதாம்பூபர்ண சனளாய் மோக்ஷத்தின் பொருட்டு, பிருகு, அத்ரி, மரீசி, மார்க்கண்டேயர், சுமதி, சப்தரோமா, ஜாலி, என்னும் சப்தருஷிகள் தபசுசெய்து கொண்டிருந்தார்கள். இப்படியிருக்க க்ஷீராப்தியில் ஸ்ரீயஃபதிக்கும் பெரியபிராட்டியாருக்கும் ப்ரணய கலஹம்நேரிட்டு அனேக ஆத்மோஜ் ஜீவனத்தின் பொருட்டு பெரிய பிராட்டியா ரானவள் திருப்பாற்கடலை விட்டு முனிகணங்கள் நிறைந்த பாவன மான அந்த பிருந்தாவனத்தில் தபசு செய்துகொண்டிருந்த ப்ருகு மஹாருஷியின் ஆஸ்ரமத்தையடைந்து, ஒருசந்தன விருக்ஷத்தினடி யிலே அப்ராகிருத திவ்ய மங்களவிக்கிரஹ ரூபமான சிறுகுழந்தை யாய்ச் சயனித்திருந்தாள். ப்ருகுமஹாருஷியானவர் மார்க்கண்டே யருடனும் சிஷ்யாளுடனும் பகவதாராதனத்திற்கு புஷ்பம்பறிக்க வந்தபோது, நற்செய்லாய் அதிகசுந்தரமான அந்தக்குழந்தையைக் கண்டனர். ப்ருகுமாஹாருஷியும், ஆச்சரியத்தை யடைந்து இந்தக் குழந்தை சாக்ஷாத், லக்ஷ்மியைப்போன் றிருக்கின்றதென்று நினைத்துத்தாமே எடுத்துக்கொண்டுவந்து தன்பார்யை முதலான ருஷிபத்னி களிடத்தி லொப்பித்து ஜாக்கிரதையாய் ரக்ஷித்து

வாருங்கோளென்று நியமித்தார். ருஷிபத்னிகளும் அப்படியே யாகட்டுமென்று சொல்லி மிகவும் ஆதராதிசயத்துடன் வளர்த்து வந்தார்கள். இப்படி நாளொரு மேனி பொழுதொரு வண்ணமாக வளர்ந்துகொண்டு வருங்குழந்தைக்கு ஒரு நல்லநாளில் ருஷிகளு டன்கூடி பிருகுவானவர் வேதவல்லி என்று திருநாமஞ்சாற்றினர்.

வேதவல்லியும் ருஷிகளுக்குச் சிஶ்ரூஷை செய்து கொண்டு சிலகாலம் வசித்திருக்கையில் க்ஷீராப்திநாதன் ஸ்ரீமாஹா லக்ஷ்மி யைக் கடாக்ஷிக்கும் பொருட்டு இராஜவடிவு கொண்டு அந்தப் பிருந்தாவனத்தை'யடைந்தார். அங்கு ஸகிகளோடு புஷ்பம் பறித் துக்கொண்டிருந்த வேதவல்லியைக்கண்டு வியாமோஹங்கொள்ள அவளும் தன்பிதாவான பிருகுவுக்கறிவிக்க அவரும் அந்த மஹா புருஷனைக்கண்டு இவர்சாக்ஷாத் ஸ்ரீ மாஹாவிஷ்ணு வென்றறிந்து வேதவேதாந்தங்களினாலே பல்லாயிரக்கோடி அண்டங்களுக்கும், நாதனே பிரம்ஹருத்ரேந்திராதி தேவர்கள் முதலானோர்களுக்கும், காரணபூதனே மந்நாதனே என்றிப்படிப்பலவாருக ஸ்தோத்திரஞ் செய்து சாஷ்டாங்க தண்டஞ் சமர்ப்பித்துத் தேவரீர் அப்பிரா கிருத திவ்யமங்கள விக்ரஹஸ்வரூபத்தைச் சேவைசாதித்தருள வேண்டுமென்று பிரார்த்தித்து பத்தாஞ்சலியுடராய் நின்றுகொண் டிருந்தார்.

வாரீர் நாரதரே! இப்படிப் பிரார்த்தித்த பிருகுமாஹாரு ஷிக்கு க்ஷீராப்திநாதனை ஸ்ரீமந்நாராயணன் தன்நிஜஸ்வரூபமான சதுர்ப்புஜ சங்குசக்ரமகரகுண்டல கிரீடக்கிரைவேய கௌஸ்துப ஹார வைஜயந்திவனமாலிகாதி திவ்யாயுத திவ்யபூஷண திவ்யமங் கள விக்ரஹஸ்வரூபத்தைச் சேவைசாதித்தருளினர். பிருகுமுனி வரும் ஶாஷ்டாங்கமாகத் தண்டஞ்சமர்ப்பித்து ஆனந்தித்துப்பல வாருக ஸ்தோத்திரஞ்செய்தனர். அப்போது ஆழிவண்ணன், அவரை நோக்கி வேண்டினவரங்களைக் கேளுமென்று அருளிச் செய்ய,பிருகுமஹாருஷியும் ஸ்வாமீ! இந்தத் திவ்யமங்கள விக்ரஹ ஸ்வரூபத்துடன்" இந்தப் பிருந்தாவனத்திலே அடியேனுக்கும், மார்க்கண்டேயருக்கும் மற்றும் சமஸ்தாத் மாக்களுக்கும் எப்போ தும் சேவைசாதித்துக்கொண்டெழுந்தருளி இருக்கவேண்டுமென்று பிரார்த்தித்தார். அருமாகடலும் அப்படியே சேவைசாதிக்கின்றோ

மென்று வரப்ரதானஞ் செய்தருளி, வாரீர் பிருகுவே! உம்மிடத்தில் வளரும் வேதவல்லி என்னும் கன்னிகையை எனக்குத்கொடுத்துத் திருக்கலியாணஞ் செய்யவேண்டுமென்று அருளிச்செய்தார். பிருகுமஹாரிஷியும் தன்யோஸ்மி என்று ஒத்துக்கொண்டு, வேதவல்லியை அழைக்க அவளும் புன்னகையுடன் வந்து ஸ்ரீயஃபதியைச்சேவித்து, இவர்தான் மந்நாதனென பர்த்தாவென்றும் இவரைத்தான் விவாஹஞ்செய்துகொள்ளக் கடவேனென்றுஞ்சொல்ல அப்படியே செய்விக்கின்றேனென்று சொல்லி பிருகுவும் தேவர்களும் ரிஷிகள் சூழ ஶாஸ்திரோக்தளும் ப்ரகாரம் ஹோமாதிகளை வளர்த்து பாணிக்கிரஹணவிவாஹ மஹோத்ஸவங்களைச் செய்வித்தார். அப்போது ப்ரம்ஹருத்திரேந்திராதி தேவர்கள் ரிஷிகள் முதலானசகலரும் மந்நாதனை ஸ்ரீயஃபதியைச் ஸாஷ்டாங்கமாகத் தண்டஞ்சமர்ப்பித்துபலவாறுக ஸ்தோத்திரஞ்செய்து புஷ்பமாரி பொழிந்து ஆனந்தபரிதராய் பிருகுவைக் கொண்டாடி இந்தவேதவல்லித்தாயாரை சாக்ஷாத் ஸ்ரீமாஹாலக்ஷ்மி என்றறியு மென்று சொல்லித் தங்கள்தங்கள் ஸ்தானங்களை யடைந்தார்கள்.

அனந்தரம் மந்நாதனை என்னையாளுடை அப்பன் என்னும் ஸ்ரீயஃபதியானவர் மாகமாதத்துச் சுக்லபக்ஷத் துவாதசியில் ஆவிர்ப்பவித்து திருக்கலியாணஞ் செய்துகொண்டு அனேக ஆத்மோஜ்ஜீவனமாக அந்தப்ருந்தாவனத்தில் சேவைசாதித்துக்கொண்டிருக்கும் வைபவத்தைக் கேட்கின்றவர்கள் வாசிக்கின்றவர்கள் அந்தத் தினத்திலே அவரைத் தண்டஞ்சமர்ப் பிக்கின்றவர்கள் முதலாயினோர் இஹபரைஶ்வரியத்தை யடைந்து வாழ்ந்துகொண்டிருப்பார்கள்.

தெள்ளிய சிங்கர்

பள்ளியி லோதிவந்த தன்சிறுவன்
வாயில் ஓராயிரநாமம்
ஒள்ளிய வாகிப்போத ஆங்கு அதனுக்கு
ஒன்று மோர்பொறுப்பிலனாகி
பிள்ளையைச் சீறிவெகுண்டு தூண்புடைப்பப்
பிறையெயிற் றனல்விழிபேழ்வாய்
தெள்ளிய சிங்கமாகியதேவைத்
திருவல்லிக்கேணிக்கண்டேனே.

தெள்ளியசிங்கர் (நரசிம்மர்) தைவிகவிமானம், வீற்றிருந்ததிருக்கோலம், மேற்கே திருமுகமண்டலம். அத்ரிமஹரிஷிக்கும் ஜாலிமஹரிஷிக்கும் ப்ரத்யக்ஷமாய் மோக்ஷம் தந்தவர்.

## தெள்ளியசிங்கர்

## அத்ரிமஹாமுனிவருக்கு மோக்ஷமளித்தல்

சிவபிரான் சொல்லுகிறார்:— வாரீர்நாரதரே, அந்த ப்ருந்தாவனத்தில் மஹாப்ரசித்தரும் பாகவதருமான அத்ரி என்னும் மஹா ரிஷியானவர் ஸ்ரீமந்நாரயணனைக் குறித்து மோக்ஷாபேக்ஷையை யுடையவராய் இதராளாலே செய்யவரிதான மஹா தபசைச்செய்துக் கொண்டிருந்தார். கபிலமஹரிஷிக்குப் பௌத்திரரும் தருணரென்பவருக்குப் புத்திரருமான விகடமஹா ரிஷியானவர் பூவலம்செய்துகொண்டு மனோஹரமான அந்த ப்ருந்தாவனத்திற்கு வந்துசேர்ந்து தபசு செய்துகொண்டிக்கும் அத்ரிமஹாருஷியைக்கண்டு தண்டஞ்சமர்ப்பிக்க அத்திரிமுனிவரும் அவரைப் பூஜித்து ஆலிங்கனஞ் செய்துகொண்டு வர்த்தமானங்களைக் கேட்க, விகடர்சொல்லுகின்றார். வாரீர், முனிபுங்கவரே! லோகபாவனமான கங்காதீரத்தில் தடாகவிருக்ஷபக்ஷி புஷ்பங்களாலும் ரிஷிகணங்களாலுஞ் சூழ்ந்துரம்யமாயிருந்துள்ள ஜம்பூவனமொன்றிருக்கின்றது. அங்குள்ள கபிலர் புத்திரரான தருணர் என்னைப் பெற்று லோகாந்தரத்தை யடைந்தார். நான் அங்குள்ளரிஷிகளால் வளர்ந்து உபநயன அத்யயனதிகளை யடைந்து அங்குவெகுகாலம்

அந்த பெரியோர்களுக்கு சிஶ்ரூஷை செய்துக் கொண்டிருந்தேன். அங்கிருக்கும்பார்க்கவ முனிவரைப் பார்க்கவேண்டுமென்று மேரு பர்வதத்தி லிருக்கும் மரீச ருஷியானவர் வந்தார். அவரைப் பார்க்கவருஷியும் பூஜித்து நீர் மேருபர்வதத்தி லிருந்து வருகின்றீரே அங்குள்ள தேவரிஷிகள் சமுதாயத்தில் நடந்த விருத்தாந்தமேதென்று வினவினர். மாரீசர் பார்க்கவரைப் பார்த்து அந்த மஹம்மேருவில் தேவரிஷிகள் ஸித்தர்கள் வசிஷ்டர் முதலானோர் ஏகீபவித்தார்கள். இவர்களில் வசிஷ்டர் சொன்னதாவது, தக்ஷிண திக்கிலே துளசீவனமானது பிரசித்தமா யிருக்கின்றது. அங்கே சிரேஷ்டரான அத்ரிமஹாமுநியானவர் அரியதான தபசைச்செய்து கொண்டிருக்கின்றார். அவருக்கு ஸ்ரீயஃபதி பிரசன்னராய்ச் சேவை சாதிக்கப் போகின்றாரென்று வசிஷ்டர் சொன்னதாக மாரீசர் பார்க்கவருக்குச் சொன்னர். அதைக் கேட்டுக்கொண்டிருந்த விகடனை நான் தேவரீரைத் தண்டஞ் சமர்ப்பிக்கவேண்டி விடை கொண்டேனென்று சொல்லினர். கர்ணாம்ருதமான செய்தியைக் கேட்ட அத்ரியும் மிகவும் ஆச்சரியத்துடன் சந்தோஷித்து விகடரைக் கொண்டாடிக் கொண்டிருந்தார். விகட மாமுனிவரும் அங்குள்ள முனிவர்களோடே வெகுகாலம் வாசித்துக்கொண்டிருந்தார்.

கேட்டீரோ நாரதரே! இப்படி அந்த ப்ருந்தாவனத்திலே ரிஷிகளுடன் கூடின அத்ரிமஹாமுனியானவர் சரத்காலம் வந்து ஆஹ்லாதகரமாய்ச் சந்திரன் பிரகாசிக்கு மொருநாள் ப்ராதக் காலத்தில் அனேக ரிஷிகளுடனே பிராதஸ்ஸந்தியைச் செய்யப் புறப்பட்டு அங்குள்ள இந்திரதீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து நித்தியா நுஷ்டானங்களைத் தீர்த்துக்கொண்டு ஆஶ்ரமத்தை யடைந்து அந்த ரிஷிகளுடனே ஆசனத்தி லிருந்துகொண்டு ஸ்ரீயஃபதியின் அனந்த கல்யாண குணவைபவங்களை யனுபவித்துக் கொண்டிருந்தார். நிர்ஹேதுகமாய் தேவதுந்துமி முழங்கிற்று. புஷ்பமாரி பொழிந்தது. தேவர்கள் ரிஷிகள் முதலானகூட்டங்கள் வந்தன. அப்சரசுக்கள் நடனஞ்செய்தனர். இப்படி ஆச்சரியகரமான சப்தத்தைக்கேட்டுத் தேவர்கள் ரிஷிகள் முதலானோர்களையுங் கண்டு அவர்களுடனே யெழுந்திருந்து நான்கு திக்குகளையும் சிஷ்யாளு

டனே பார்த்துக் கொண்டிருந்தார். கிழக்கு முகமாக விருக்கும் இந்த அத்ரி மஹாரிஷிக்கு முன்பாகத்திவ்ய தேஜஸையுடைத்தான ஒரு விமானம் தோன்றிற்று. அதின் உபய பார்சுவங்களிலும் சாமரங்களை வீசிக்கொண்டிருக்குஞ் சர்வாபரண பூஷிதாளான இரண்டு திவ்ய புருஷர்களையும் பின்பக்கத்தில் தைத்ய தானவர்களை ஸம்ஹரிப்பவரான சூர்யகாந்தி போன்ற கருடபகவானையும், முன்புறத்தில் பொற்பிரம்பேந்திய சேனை முதலியாரையும் இடப்பக்கத்தில் சந்திரகாந்தியை யொத்த ஆதிசேஷனையும் தக்ஷிணபார்சுவத்தில் சனகாதி முனிவர்களையுங் கண்டு தண்டஞ் சமர்ப்பித்தனர். அனந்தரம் அந்த விமானத்தின் மத்தியில் ஆஸ்ரிதாளுக்கு சௌம்யரூபராகியும் அனாஸ்ரிதாளுக்கு பயங்கர ரூபியாகியும் சதுர்ப்புஜ சங்கக்ர மகரகுண்டல கிரீடாதி திவ்யாயுத திவ்யபூஷணயுக்த திவ்ய திருமேனியுடனே சேவை சாதித்தருளும் நரசிம்ஹ மூர்த்தியைக்கண்டு ஸாஷ்டாங்கமாகத் தண்டஞ்சமர்ப்பித்து எழுந்திருந்து மயிர் கூச்சிட்டு ஆனந்த பரவசராய்.

வாரீர் தேவாதீஸரே, மஹாபாஹுவே! ஜகந்நாயகரே ஜகத்குருவே புண்டரீகாக்ஷ ப்ரபுவே! அனேககாலம் ஸ்தோத்திரஞ் செய்த போதிலும் அறியக்கூடாத தேவரீரை ஸ்தோத்திரஞ்செய்ய நானெப்படி சக்தனாவேன். வாரீர் ஸ்வாமீ, நிரஞ்சனராயும் நித்யநிரவத்யராயும் பரிசுத்தராயும் சத்யசங்கற்பராயும் குணசஹிதராயும் ஞானானந்த ஸ்வரூபியாயும் ஜகத்ருஷ்டி ஸ்திதிலயகர்த்தராயும் ஜகத்காரணபூதராயும் சேஷியாயும் சகலஜகதீஸராயும் சேஷசாயியாயும் பிரம்மஸ்வரூபியாயும் பிரணவஸ்வரூபியாயும் வேதஸ்வரூபியாயும் வேதவேத்யராயும் எக்யஸ்வரூபியாயும் எக்யநாதராயும் எக்யபொக்தாவாயும் அனந்த கல்யாணகுண பரிபூர்ணராயும் புத்திஸ்வரூபியாயும் பரமாத்ம ஸ்வரூபியாயும் ஸ்தூல சூக்ஷ்மரூபராயும் குருவாயும் லகுவாயும் துர்லபராயும் சுலபராயும் ஆயிரந்திருமுடிகளையும், ஆயிரந்திருக் கண்களையும் ஆயிரந் திருக்கைகளையும், ஆயிரந்திருவடிகளையும் உடைத்தானவராயும் அனந்தராயும் ஸ்ரீதரமாதவ அச்சுதானந்த கோவிந்த நரஹரிகேசவ நாராயணாதி திருநாமங்களையுடைத்தான ஸ்வாமீ! என்றிப்படி பலவாறாக ஸ்தோத்திரஞ்செய்தார்.

வாரீர் நாரதரே இப்படி ஸ்தோத்திரஞ்செய்த மஹாநுபாவரான அத்ரி மஹாமுனிவரைப்பார்த்து அழகியசிங்கர் அருளிச்செய்கின்றார். அத்திரிமுனிவரே! இதராளாலே செய்யவரிதான தபசையும் ஸ்தோத்திரத்தையுஞ் செய்தபடியாலுமக்குப் பிரசன்னனானேன். என்னைத் தியானித்து துதிக்கின்றவர்களுக்கு வேண்டினவரங்களையும் என்பதத்தையுங் கொடுப்பேனாகையால் உமக்கு வேண்டினதைக்கேளும் என்றனர். அத்ரியும், ஸ்வாமீ, கொழுப்பு, எலும்பு, ரக்தம், தண்ணீர், மலமூத்திராதிகளாலே கட்டப்பட்டு குஸிதமாய் ஹேயாலயமா யிருக்குமிந்த சரீரத்தைத் தரிக்கைக்குச் சக்தனல்லேனாகையால் முக்தியைக் கொடுத்தருள வேண்டும், அன்றியில் அடியேனுடனிருக்குமிந்த ஜாலிமஹாருஷிக்கும் முக்தியைக்கிருபை செய்தருளவேண்டுமென்று விண்ணப்பம் செய்தனர். அழகியசிங்கர் அத்ரியை கடாக்ஷித்து அப்படியே கொடுக்கின்றேனென்றருளிச்செய்து உம் நிமித்தமாக இதராளான சகலஜனங்களுக்கும் முக்தியைக்கொடுக்கத் துளசீவனத்தாலும் சோலைகளாலும் ரம்யமாய்த் தாமரை முதலான புஷ்பங்களாலும் ஹம்சம் முதலான பக்ஷிகளாலும் நிறைந்து மனோஹரமா யிருக்கின்ற கைரவிணீ புஷ்கரிணி முதலான ஸரசுக்களாலும் பிரகாசிக்கின்றது உமதாஸ்ரமமான இந்த பிருந்தாவனத்திலே பாபரஹிதர்களாகியும் பரிசுத்தர்களாகியும் மஹாநுபாவர்களாகியு மிருக்கின்ற இந்த மஹாருஷிகளானவர்கள் என்பொருட்டுத் தீக்ஷணமான வ்ருதத்தைக் கைக்கொண்டவர்களாய் வாசஞ்செய்கின்றார்கள். ஆகையால் இப்படி மனோஹரமான இந்தப் பிருந்தாவனத்திலேயே பிரம்மவிகல்ப பரியந்தம் ஆத்மாக்களின் சௌக்கியத்தின் பொருட்டு வசிக்கப் போகின்றேன். வாராய் அத்ரியே; ஸம்சாரமாகின்ற மருகாந்தாரத்தில் சஞ்சாரத்தாலே யுண்டான தாபத்திரை யாதுராளாயுத் பகவதலாப க்கிலேஸத்தாலே துக்கிதாளாயும் புத்திஹீனளாயுமிருக்கின்ற மநுஷ்யாள்ஹிதத்தின்பொருட்டு அனேககால மிங்கே வசிக்கின்றேன். வாராய் அத்ரியே! கர்மத்தாலே துக்கமுண்டாகும் அத்தால் குரோதமுண்டாகும், அத்தால் அக்யான் முண்டாகும் அத்தால் பாபங்களுண்டாகு மாகையால் சேதனர்கள் ஸம்சாரமா சமுத்திரத்திலே மூழ்கிப் பாபங்களைப் பெருக்கச்செய்து பரந்தாமனான என்னைக் காரணபூதனென் றறியாமல் நசித்து நரகத்திலே

யழுந்துகின்றார்கள். அநாதியான என்னை ஜகத்காரண பூதனென்ற றியத்தக்க மஹாநுபாவர்கள் துர்லபாள். இந்தலோகத்தில் ஒருவனுக்குத் தருமத்தில் புத்தியுண்டாய் அத்தாலே அர்த்தத்தை யடைந்து காமத்தின் பொருட்டு எத்தனிக்கின்றானே யல்லது மோக்ஷத்தி லெத்தன முடையவனில்லை. ஒராசொருவன் ஜன்மாந்தர சஹஸ்ர நற்றவங்களாலே யொருஜன்மத்தில் பாபரஹிதனாகி என்னை யாஸ்ரயித்து ஞானியா யிருப்பனேயானால் அவனுக்குப் பாபங்களில்லை. ஒருவேளை பிரமாதத்தாலே கிஞ்சித்து உண்டானாலும் அதுகளை நானே போக்கி அதோ லோகத்தில் பிரவேசியாமல் ரக்ஷிக்கின்றேன். என்பக்தாளுக்கு ஒரிடத்திலும் பயமில்லை. அவர்களைக்கண்டால் பிசாசங்கள் ராக்ஷசாள் அசுராள் முதலினோர்கள் பயப்படுவார்கள். என்பக்தர்களின் சேவை மாத்திரத்தினாலேயே எமதூதர்கள் பயமோஹிதர்களாய்க் கைகளைக் கூப்பிக்கொண்டு தூரவிலகிப் போகின்றார்கள். சகலலோகஹிதர்களாகியும் பூஜ்யர்களாகியும் மஹாத்மாக்களுமான என் பக்தர்களைச் ஸகலமான தேவசமூஹங்கள் தண்டஞ்சமர்ப் பிக்கின்றார்கள். எந்தப் புருஷனானவன் மூடனாய்க்கொண்டு என் பக்தர்களை நிந்திக்கின்றானோ அவன் குலபந்துக்களோடே நரகத்தையடைவான், என்பக்தன் குலீனனானாலும் துஷ்குல ஜாதனானாலும் நல்ல ஸ்வபாவனானாலும் கெட்ட ஸ்வபாவனானாலும் ஆசாரமுள்ளவனானாலும் துராசாரனானாலும் அவனை நிந்திக்கலாகாது. சகல வித்யாபாரீணனாகவும் ஸாங்க வேதவித்தாகவு மிருக்கின்ற புருஷனைப்பார்க்கிலும் குசலனான என் பக்தன் ஸ்ரேஷ்டன். எந்தப்புருஷாள் அர்த்தகாமபராளாய் எந்தெந்த தேவர்களை உபாசிக்கின்றார்களோ அவர்களுக்கு நானே அந்தத் தேவர்களுள் அந்தரியாமியாயிருந்து அந்தந்தப் பலன்களைக் கொடுக்கிறேன். யாவரென்னைக்குறித்து அர்த்தகாம விஷயங்களை ஆஸ்ரயிக்கின்றார்களோ அவர்களுக்கு அதைக் கொடுக்கின்றேன். லோகத்தில் தர்மார்த்தகாம மோக்ஷங்களென்று புருஷார்த்தங்கள் நான்கு விதங்களுண்டு. அவற்றுள் மோக்ஷத்திலிச்சையுடையவன் மஹாத்மாவாய் விலக்ஷணனவன், இப்படிப் பட்ட மஹாத்மிய முடைத்தான மஹாநுபாவன் என் பக்தன் எனக்குமிகவும் இஷ்டனாகவும் டரமேகாந்தியாகவும் பூஜிக்கத்தக்க வனாகவும் லோகங்களுக்கெல்லாஞ் ஸேவிக்கத் தகுந்தவனாகவுமர

வான் - வாரீர் அத்ரியே நீர் இந்திரியஸமூகஹங்களை ஜயித்து இதா விஷங்களில் ஆசாரஹிதராய் என்விஷயத்தில் பரிபூர்ணமான பக்தியைச் செய்தீராகையால் உமது விஷயத்தில் அநுக்கிரஹமுள்ள நான் உமக்கும் உமது சம்பந்த சம்பந்திகளுக்கும் மோக்ஷத்தைக் கொடுக்கிறேன். பரிசுத்தமாகவும் சாசுவதமாகவு மிருக்கும் பரமபதத்தைச் சீக்கிரமாக அடையக்கடவீர் என் றருளிச்செய்தனர். லக்ஷ்மீநரசிம்ஹ மூர்த்தியான அழகியசிங்கரின் கடாக்ஷத்தைப் பெற்று அத்ரிமஹாருஷியும் ஜாலிமஹாருஷியுடனே சர்ப்பமானது ஜீர்ணமான சர்மத்தை விடுமாப்போலே சரீரத்தை விட்டார். இப்படிதேஹத்தைப் பரிஹரித்தவர்களிருவரும் கோடி சூர்யப்ரகாசமான விமானத்திலே மஹருஷிகள் பார்த்துப் பூஜிக்கவேறி லோகாந்தரங்களிலுள்ள தேவர்கள் கொண்டாட பாலசூர்யாளைப் போலே அதிசோபா சம்பன்னராய்ப் பரமபதத்தை யடைந்தார்கள். அன்றுமுதல் லோகசுருவான ஸ்ரீநரசிம்ஹ மூர்த்தியானவர் மனோஹரமான ப்ருந்தாவனத்திலே சகல தேவர்கள் முதலான லீலாவிபூதியிலுள்ள சேதனர்கள் பூஜித்து உஜ்ஜீவிக்கும்பொருட்டு அர்ச்சாரூபமாக நிர்ஹேதுகக் கிருபையினாலே தெள்ளியசிங்கர் சேவைசாதிக்கின்றார். வாரீர் நாரதரே! ஆகையால் இந்த வைபவத்தைக் கேட்கின்றவர்கள் சர்வாபீஷ்டங்களையு மடைந்து மோக்ஷத்தையும் பெறுவார்களென்று நாரதரைப் பார்த்துச் சிவபிரான்சொல்லிப் பின்னுஞ் சொல்லுகின்றார்.

## ஸ்ரீராமபிரான்

பரதனும் தம்பிசத்துருக்கனும்
இலக்குமணனோடு மைதிலியும்
இரவும் நன்பகலும் துதிசெய்யநின்ற
இராவணாந்தகனை எம்மானை
குரவமே கமழும்குளிர் பொழிலூடு
குயிலொடு மயில்கள்நின்றால
இரவியின் கதிர்கள்நுழைதல்செய்தறியாத்
திருவல்லிக் கேணிக் கண்டேனே.

சக்கரவர்த்தி திருமகன் (ஸ்ரீராமர்,) பரதாழ்வான், சத்ருக்னாழ்வான் லக்ஷ்மணர், மைதிலி புஷ்பகவிகாநம் தெற்கே திருமுக மண்டலம், நின்றதிருக்கோலம் சசபதர்குமாரராணமதுமான் என்னும் மஹாரிஷிக்கு ப்ரத்யக்ஷம்.

## சக்ரவர்த்தி திருமகன் மதுமானுக்கு சேவைசாதித்தல்.

வாரீர் நாரதரே! முன்திரேதாயுகத்திலே ஸ்ரீயஃபதியானவர் ராக்ஷஸவதார்த்தமாக இட்சுவாகு வம்சத்திலே ஸ்ரீராமரென்று நாமமுடையவராய் சஹோதராருடன் மநுஷ்யரூபியா யவதரித்து சீதாபிராட்டியாலே ராவணாதி ராக்ஷசாளனைவரையும் சம்ஹரித்து சீதாபிராட்டியை யடைந்து தர்மமாக வெகுகாலம் ராஜ்யபரிபலானஞ்செய்து பிராதாக்களுடனே தன்னுடை ஜோதிக்கு எழுந்தருளினார்.

ஸ்ரீராமபிரானைக்குறித்து பாண்டியதேசத்திலுள்ள பாண்டர பர்வதத்தில் மஹாதேஜஸ்வியான மமபத ரென்பவர்தபசு செய்து கொண்டிருந்தார். தேவேந்திரன் முதலான தேவர்களால் அநுப்பப்பட்ட ஹேலையென்னும் அப்சரஸ்திரீயானவள் மமப தரை கானத்தினாலே மயக்கி ஓர்புத்திரனை ஈன்று ஓர்குகையிலே விட்டுப்போனாள். அந்த ஆண்சிசுவும் தெய்வீகமாகத் தேன்தன் வாயில் வந்துவிழ அத்தால் ஜீவித்திருந்த அந்த சிசுவை அங்குள்ள ருஷிகள்கண்டனர். மதுவினால் ஜீவிந்திருந்த குழந்தைக்கு

மதுமானென்று திருநாமஞ்சாற்றி வளர்த்து வேதவேதாந்த பாரங்கதனுகச் செய்தனர். அதனுலே மதுமானும் மஹாக்ஞயானுதிகனுக விருக்கையில் பார்க்கவரையொத்த கார்க்கேயரானவர் மதுமானிருக்கும் அந்த வனத்திலே வரக்கண்டனர். மதுமானும் அவரை பூஜித்து நீர்யாவரென்று வினவ அவரும் என்பேர் கார்க்கேயரென்று சொல்லுவர்கள். என்குரு அனகமஹாமுனிவர். நான் வால்மீகர் ஆஸ்ரமத்திலிருந்து அவர்சொன்ன ஸ்ரீராமாயணத்தை அகஸ்தியருக்கு விண்ணப்பஞ்செய்யப் போகின்றேனென்று சாங்கோபாங்கமாகச் சொல்லிப்போயினர். அதுகேட்ட மதுமானும் சக்ரவர்த்தித் திருமகனுர் வைபவங்களி லீடுபட்டு அத் தருமஸ்வரூபியான சக்ரவர்த்தித் திருமகனையும், அவர்சஹோதரர்களான இளயபெருமாள், ஸ்ரீபரதாழ்வான், சத்துருக்னுழ்வானையும் சீதாபிராட்டியையுங்கண்டு சேவிக்கும் பாக்கியமும்,மோக்ஷமும், நமக்கு உண்டாகப் போகின்றதா மென்று சிந்தித்துக் கொண்டிருந்தார். கார்க்கேயமஹாருஷி சொல்லிப்போன அன்றிராத்திரியே ஸ்ரீயஃபதியும் கார்ககேயரைப்போல் ஸ்வப்னத்தில் சேவைசாதித்து நீர் தக்ஷிணத்தில் மயிலை மாநகருக்குச் சமீத்திலுள்ள பிருந்தாவனத்திற்குப்போனுல், சௌக்கியமுண்டாகுமென் றருளிச்செய்தனர். மதுமானும் விழித்துப்பார்த்துச்சற்றுநேரம் யோசித்து ஸ்வப்னஞ்சாதித்தவர் விஷ்ணுவேயென்று நிச்சையித்துப் பிராதஃகாலத்திலெழுந்திருந்து அநுஷ்டானங்களைமுடித்துப்பெரியோர்கள் அநுமதி பெற்று, இராப்பகலாக கடந்துவந்து, திவ்யமான மயூரநகர பிருந்தாவனத்தை யடைந்து, கைரவிணி என்னும் புஷ்கரிணியிலே தீர்த்தமாடி அங்குள்ள பெரியோர்களையும் பகவானையுந் தண்டஞ் சமர்ப்பித்து அஞ்சலிஹஸ்தனுக நின்றுகொண்டு சக்ரவர்த்தித்திரு மகனை நோக்கி, அகிலஜகத்ஸ்வாமின், லீலாமாநுஷ விக்ரஹ ஸ்வரூபா, ராக்ஷசகுலகாலா, தர்மஸம்ஸ்தாபன ஸ்வரூபா ஆஸ்ரிதவாத்ஸல்யைக ஜலதே, அபராவாரகருணும்புதே, பக்தபராதீனு, நிகில ஜகத்காரணபூதா, அகிலஹேயப்ரத்யனீகா, ஆனந்தகல்யாணகுணகண ஸ்வரூபா, ஶரணுகதவத்சலா, திருவயோத்தியில் ஒருசாதனமு மின்றிக்கே வாழும் புல்லெறும்பாதிசராசரங்களையும் நிர்ஹேதுகமாக வைகுந்தத்தேற்றி நித்யைஶ்வர்யத்தைக் கொடுத்த கிருபாநிதியே! ராவணுதிகளைவதித்து பிரம்ஹாவான ஸ்ரீவிபீஷ

ணாழ்வானுக்கும், பரமசிவனுன ஆஞ்சனேயரென்னுந்திருவடிக்கும் லீலாவிபூதியிலே சிலகாலம் வாழுமைஸ்வரியத்தைப் பிரதானஞ் செய்த தயாநிதியே, என்றிப்படி பலவாருக ஸ்தோத்திரஞ்செய்து நவரத்ன கசிதமான கிரீடத்தைப் பிரகாசிப்பிக்கும் பரஞ்சோதி ஸ்வரூபமான திருமுகமண்டலத்தையும், செந்தாமரைபோன்ற திருநயனங்களையும், சங்கம்போன்ற திருக்கழுத்தையும், திரண்டுருண்டு நீண்டிருக்கும் புஜங்களையும், தேஜோமயமான பீதாம்பரத்தையும், மகரகுண்டல கர்ணபூஷணங்களாலும் விசாலமான திருமார்பிலணிந்த வைஜயந்தி வனமாலிகாதிக்கிரைவேய முக்தாஹாரங்களாலும், அலங்கிருதமான திவ்யதிருமேனியையும், செந்தாமரையையொத்த திருவடிகளையும், அவரருகிலே வசிக்கும்பூஜ்யையான சீதாபிராட்டியையும், கைங்கர்ய ஸ்ரீயையடைந்த இளயபெருமாள், ஸ்ரீபரதாழ்வான், ஸ்ரீசத்துருக்ஞாழ்வான் முதலானவர்களையுஞ் சேவித்தனர். ஆனந்தஸமுத்திரமாகின்ற அலைகளிலே மூழ்கிக்கொண்டிருக்கும் மஹாநுபாவரானமதுமானை பரமதயாளுவான சக்ரவர்த்தித் திருமகன் கடாக்ஷித்து, வாராய் பக்தியிலே சிறந்தமதுமானே! உனக்குவேண்டின அபீஷ்டங்களைக் கேட்டுக்கொள் என்றருளிச் செய்தார். மதுமானும் ஸ்வாமீ! அடியேன் தேவரீரை ஆராதிக்கும்படி சேவைசாதித்தருள வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய, சக்ரவர்த்தித் திருமகனும் அங்கீகரித்து அந்தப் பிருந்தாவனத்திலே லோகஹிதத்தின்பொருட்டுக் கிருபையினலே வாசஞ்செய்து வெகுகாலம் மதுமானலாரரதிக்கும்படியாக வெழுந்தருளியிருந்து மதுமானுக்குத் தேஹாவஸானகாலத்திலே பரமபதத்தையுங்கொடுத்து அந்த ஸ்தலத்திலே இப்போதும் அனேகசேதனுளாலே பிரார்த்திக்கும்படியான ஸர்வாபீஷ்டங்களையுங் கொடுத்துக் கொண்டு சேவை சாதிக்கின்ருரென்று பரமசிவன் விளம்பினர்.

## ஸ்ரீ வரதராஜப்பெருமாள்

மீனமர்பொய்கை நாள்மலர்கொய்வான்
வேட்கையினேடு சென்றிழிந்த
கானமர்வேழம் கையெடுத்தலறக்
கராஅதன் காலினைக்கதுவ
ஆனையின்துயரம் தீரப்புள்ளூர்ந்து
சென்றுநின்று ஆழிதொட்டானை
தேனமர்சோலை மாடமாமயிலைத்
திருவல்லிக்கேணிக் கண்டேனே.

தேவப்பெருமாள் கருடாரூடர், சேஷவிமாநம். கிழக்கே திரு முகமண்டலம், ஸப்தரோமாவுக்கு ப்ரத்யக்ஷம்.

## ஸ்ரீவரதராஜப்பெருமாள்
## ஸப்தரோமாவுக்கு மோக்ஷமளித்தல்

வாரீர் நாரதரே! அனந்த பலபுஷ்ப விருக்ஷபக்ஷிமிருகாதிகளா லும், தடாகவாவீகூபாதிகளாலுஞ் சூழ்ந்துரமணீயமாகவிருந்துள்ள அந்தப் பிருந்தாவனத்திலே வேதவேதாந்தபாரங்கதராய் பகவத் தியான தபோஸ்ரேஷ்டரான சப்தரோமாவென்னும் பிரசித்தரான ஒருமஹாரிஷி இருந்தனர். அவர் பகவந்நியமனத்தாலே கருடா ரூடரான ஸ்ரீவரதனை சாஸ்திரோக்தப்ரகாரம் ஏறியருளச்செய்து வைகானஸவிதியினலே ஸ்தாபித்து வெகுகாலம் ஆராதித்துவந்த னர். பிறகு பகவானுன ஸ்ரீயஃபதியின் கடாக்ஷத்தைப் பெற்றுப் ப்ரமபதத்தை யடைந்தார். அன்றுமுதல் இன்றளவாகத் தம்மைச் ஸேவிக்கின்ற சேதனர்களுக்கு ஏதேதபீஷ்டமோ அவைகளை எல் லாங்கொடுத்துக்கொண்டு கஜேந்திரவரதன் என்று பிரசன்னராக வெழுந்தருளி இருக்கின்றார்.

தாரீர்நாரதரே! சோலைகளாலும் திருநந்தவனதுளசீ பிருந்தா வனங்களாலுந் தடாகங்களாலும் ரிஷிகளாலுஞ் சூழ்ந்து மனே ஹரமாகவும் ப்ரமஹரமாகவும் ரமணீயமாகவும் பாவனமாகவும் போக்கியமாகவும் வாசஞ்செயவதற்கு யோக்கியமாகவுமிருந்துள்ள மயிலை திருஅல்லிக்கேணி என்று பிரசித்தமான அந்த பிருந்தாவ

னத்திலே பரமபதநாதனும் திருவேங்கடத்தானை ஸ்ரீநிவாசன் வேங்கடகிருஷ்ணனென்னும் பார்த்தசாரதித் திருக்கோலமாகத் திருக்கைரவிணிக்கரையிலே சேவைசாதித்தருளும் வைபவத்தைக் கேளும் என்று நீலகண்டர் சொல்லுகிறார்.

## ஸ்ரீ பார்த்தஸாரதி

அந்தகன்சிறுவன் அரசர்தமரசற் கிளையவன்
அணியிழையைச்சென்று
எந்தமக்கு உரிமைசெய்யெனத்தரியாது
எம்பெருமான் அருளென்ன
சந்தமல்குழலாளலக்கண் நூற்றுவர்தம்
பெண்டிரும் எய்திநூலிழப்ப
இந்திரன்சிறுவன் தேர்முன்நின்றானைத்
திருவல்லிக்கேணிக் கண்டேனே.

பார்த்தசாரதிப்பெருமாள், ருக்மணி பிராட்டி, பலராமர், ஸாத்யகி அநிருத்தர், ப்ரத்யும்நர், ஆநந்தவிமாநம், கிழக்கேதிருமுக மண்டலம், நின்றதிருக்கோலம். வ்யாஸமஹரிஷியினால் ப்ரதிஷ்டிக்கப்பட்டு ஆத்ரேயமஹரிஷியினால் ஆராதிக்கப்பட்டவர். ஸுமதியென்னும் ராஜாவுக்கும் தொண்டைமான் சக்கரவர்த்திக்கும் ப்ரத்யக்ஷம்.

இந்திர தீர்த்தம், ஸோமதீர்த்தம், மீநதீர்த்தம், அக்நிதீர்த்தம், விஷ்ணுதீர்த்தம், இவ்வைந்து தீர்த்தங்களால் சூழப்பட்ட கைரவணியென்னும் ஸரஸ்ஸு.

ப்ருகு, அத்ரி, மரீசி, மார்க்கண்டேயர், ஸுமதி சப்தரோமா ஜாலியென்னும் ஏழுமஹரிஷிகள் தவம்புரிந்தவிடம். பேயாழ்வார், திருமழிசையாழ்வார் திருமங்கையாழ்வார், மங்களாசாஸநம்.

## ஸ்ரீ பார்த்தஸாரதிப் பெருமாள்
## சுமதிமஹாராஜனுக்கு ப்ரத்யக்ஷமாதல்

வாரீர் நாரதரே! இப்படிக்கெல்லாம் அதிகமஹாத்மியத்தைக் கொண்டிருக்குங் கைரவிணீ தீரமான அந்த பிருந்தாவனத்தில் விஷ்ணு பக்தியிற் சிறந்தவராய் மஹாதபஸ்வியாயிருக்கும் சுமதி என்னும் ஒருமஹாருஷியானவர் கைரவிணி புஷ்கரணிக்கரையில் வெகுகாலம் தபசுசெய்து வாசஞ்செய்துகொண் டிருந்தார். இப்படி இருக்கையில், தொண்டீரமண்டலத்தில் மிகவும் ஞானியாகியும் மன்மதனைப்போல் சகல லக்ஷணங்களுடன் கூடினவராகியும், சகல சாஸ்திரங்களை யறிந்தவராகியும், பிரஜா பரிபாலனத்தில் ஆசக்தியுடைய வராகியும், மங்களமான வார்த்தைகளைச் சொல்பவராகியும் தைர்யசாலியாகியும் மண்டலாதிபதி யாகியும் அகண்டைசுவர்யத்தையும் பகவத்கைங்கர்யத்தையும் உடைத்தான வருமான சுமதி என்று பேரையுடைய ஒருமஹாராஜனானவர் நீதியாக அரசாக்ஷிசெய்து கொண்டிருந்தார். அவர் முராசுர சம்ஹாரகரான ஸ்ரீயஃபதியினிடத்தில் நிச்சலமான பக்தியைவஹித்து ஆராதித்துக் கொண்டிருக்கையில், ஒருகாலவிசேஷத்தில் அனேக விருக்ஷபக்ஷி மிருகங்களாலும் அனேக தீர்த்தங்கள் மலையருவிகள் குஹைகளாலும் நானுவர்ணங்களான கரிகாதிதாதுக் களென்னும் நற்சங்கப் பொன், அரிதாரப்பொடி களுடன்கூடின உன்னதங்களான சிகரங்களாலும் ப்ரகாசித்துப் ப்ரம்ஹாதி தேவர்களும் பகவத்பக்த சீலாளான அனேகருஷிகளும் தபசுசெய்து சேவிக்கும் நாசரஹிதமான வேங்கடாசலத்தை யடைந்தார். ஆங்கு தீர்த்தங்களுக்கெல்லாம் ராஜாவாய் பாவனமான ஸ்வாமிபுஷ்கரணியை யடைந்து தீர்த்தமாடி நித்யாநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, பிரதக்ஷிணமாக வந்து, கோடிசூர்யர்களைப் போலே பிரகாசிக்கும் ஆனந்த நிலய விமானத்தைத் தண்டஞ்சமர்ப்பித்துச் சந்நிதியினுள்ளே பிரவேசித்து ஸ்ரீ அலர்மேல் மங்கை நாயகியுடன் சேவைசாதித்தருளும் சதுர்ப்புஜ சங்கசக்ரமகரகுண்டல கிரீடவைஜயந்தி வனமாலிகாகிரைவேய முக்தாஹாராதி திவ்யாயுத திவ்யபூஷண திவ்யமங்கள விக்ரஹமான திருவேங்கடத்தானைக்கண்டு சாஷ்டாங்கமாகத் தண்டஞ் சமர்ப்பித்துப் பலவாறாக ஸ்தோத்திரஞ்செய்து ஆனந்த

பரவசத்தை யடைந்து தீர்த்தப்பிரசாதம் முதலான சகலவரிசை களையும் பெற்று க்ஷேத்திரக்யரான பூவராஹப் பெருமாளையும் சேவித்துக் கிருதார்த்தனுகி ஸ்ரீநிவாசனுன ஸ்ரீயஃபதியின் கடா க்ஷத்தைப் பெற்று இப்படி நித்யமாகச் சேவித்துக் கொண்டு அனேகவித கைங்கர்யங்களைச் செய்துகொண்டு வந்தார்.

ஒருநாள் திருவேங்கட முடையானைத் தண்டஞ்சமர்ப்பித்து சாக்ஷாத் பரப்பிரம்ஹ மூர்த்தியான இந்த ஸ்ரீநிவாசன் தயாபரவ சராய்ப் பாரதயுத்தத்தில் சுலபராய்க் கொண்டு அர்ச்சுனனுக்குச் சாரத்யஞ்செய்த சின்னங்களுடனே நமக்குச் சேவைசாதித்தருளி யாட்கொள்வரோவென்று தியானித்துக் கொண்டிருந்தான், ஒரு போது ஸர்வாந்தரியாமிதான திருவேங்கடத்தான் அவன் முன் தோன்றியவாராய், சுமதியே! நீ செய்த பக்தியாலும் கைங்கர்யங் களாலும் தியானத்தாலும் மிகவுஞ் சந்தோஷத்தை யடைத்தேன். நீ அர்த்தித்த பார்த்தசாரதியான திருக்கோலத்தைப் பிரசித்த மான மயிலை பிருந்தாவனத்திற்கு வந்தால் ஆங்கு கைரவிணி புஷ் கரிணிக்கரையிலே நான் சேவைசாதிக்கின்றே னென்றருளிச்செய் தார். பிறகு ராஜனுக்கு விடைசாதித்தருளி வியாஸரைக் கடா க்ஷித்து நியமிக்க அவரும் மஹாபாக்கியமென்று ஸ்ரீய:பதியின் குணநுபவங்களை யநுபவித்து கொண்டிருந்தார். வியாசர் சிஷ்ய ரான ஆத்ரேயரானவர் வியாசரைத்தண்டஞ் சமர்ப்பித்து ஸ்வாமீ! பூர்வம் பிரம்ம ருத்திரேந்திராதி தேவர்கள் அசுராளாலே நலிவு பட்டு க்ஷீராப்திக்கரையை யடைந்து ஸ்ரீமந்நாராயணனைச் சரணு கதிசெய்தார்களன்றோ? பகவான் அப்போது அவர்களுக்கு அப யப்ரதானஞ்செய்து கண்ணனுகத் திருவவதரித்துக் கம்ஸாதிக ளைச் ஸம்ஹரித்துப் பாரதயுத்தத்தை முடித்து ஸ்வஸ்தானத்தை யடைந்தாரே, இனிகலிதோஷத்தாலே எப்படியாகுமோ வென்று சிந்தித்துக்கொண்டிருந்தார். சிஷ்யரான ஆத்ரேயரை வியாசர் கடாக்ஷித்துக் கலிதர்மம் மாறுடி நடந்தபோதினும் அதைப்பரிஹ ரிக்கும் உபாயத்தைச் சொல்லுகின்றேன்கேள் என்று சொல்லத் தொடங்கினுர், என்னவென்றால் இதற்குத் தக்ஷிணதிக்கிலே பிர சித்தியாய் பஞேக்யமான பிருந்தாவன மொன்றிருக்கின்றது அங்கு பிருகுமுதலான அனேக ருஷிகள் தபசுசெய்து கொண்டு

வாசஞ் செய்கின்றார்கள். அன்றியில் அல்லித்தாமரை கருநெய்தல் முதலான புஷ்பங்களாலும் ஹம்ஸகாரண்டவ சக்ரவாகங்கள் முதலான பக்ஷிகளாலும் அலங்கிருதமாயிருந்துள்ள கைரவிணி என்னும் பிரசித்தமான சரசின் கரையில் ஸ்ரீயஃபதிக்கு இருப்பிடமாகிய துளசீவனமென்னும் பிருந்தாவனத்தில் சுமதி என்னும் நாமமுடையவோர் முநிசிரேஷ்டர் வசிக்கின்றார். அவருடன் நீரும் வாசஞ் செய்துகொண்டிருந்தாலுமக்குச் சிரேயசு உண்டாகுமென்று ஆத்ரேயருக்கு நியமித்து விட்டு வியாசரும் பார்த்தசாரதியை சங்கம் வலக்கையிலும் தானமுத்திரை இடக்கையிலுமாக பிரமாணப்படி யமைத்து அர்ச்சாவதார விக்ரஹ ஸ்வருபமாக ஏறியருளச்செய்து, அதில் சாஸ்திரோக்தப் பிரகாரம் பரமபதநாதனை ஸ்ரீநிவாஸனை ஆவாஹனஞ்செய்து ஸாஸ்திர விதியாலாராதித்துப் பிறகு ஆத்ரேயருக்குக் காட்டிக்கொடுத்து, நீர் சுமதிஎன்னும் முநிசிரேஷ்டரிடஞ்சென்று கைரவிணி மேலைக்கரையிலுள்ள துளசீவனத்திலே பார்த்தசாரதி திவ்யமங்கள விக்ரஹத்தைச் ஸாஸ்திரோக்தப பிரகாரம் பிரதிஷ்டைசெய்து வைகானசவிதியாலே ஆராதித்துக்கொண்டிரும். கலிதோஷமும் நீங்கும். வேங்கடகிருஷ்ணனென்னும் இந்தப் பார்த்தசாரதி கடாக்ஷத்தாலே சகலாத்துமாக்களும் உஜ்ஜீவிப்பார்க ளென்றருளிச் செய்தார். ஆத்ரேயமுனிவரும் வியாஸபகவானைச் சாஷ்டாங்கமாகத் தண்டஞ்சமர்ப்பித்துப் பார்த்தசாரதி திவ்யமங்கள விக்ரஹத்தைச் ஸிரசாகவஹித்து எழுந்தருளச்செய்து கொண்டு பிருந்தாவனத்திலுள்ள சுமதி என்னும் முநிசிரேஷ்டரிடம் வந்து சேர்ந்தார். அங்கு அவர்சஹாயத்தால் வியாஸர் நியமித்தபடி கைரவிணி மேலைக்கரையில் கிழக்கே திருமுகமண்டலமாகப் பார்த்தசாரதி என்னும் வேங்கடகிருஷ்ணப்பெருமாளைச் சாஸ்திரோக்தமாகப் பிரதிஷ்டைசெய்து தாம் ஏறியருளச்செய்த, ருக்மணி, பலராமர் சாத்துவீகி அநிருத்தான், பிரத்யும்னன், இவர்களையும் சாஸ்திர வத்தாய்ப் பிரதிஷ்ட்டை செய்து வைகானஸ விதியாலே ஆராதித்துக்கொண்டிருந்து ஸ்ரீயஃபதியின் கடாக்ஷத்தை யடைந்தார்.

இப்படியிருக்கத் திருவேங்கடத்தானாலே நியமனம் பெற்ற தொண்டீரமண்டலத்தரசனான சுமதிஎன்னும் ராஜனும் தன்பட்ட

ணத்தையடைந்து சில நாளிருந்து அங்குநின்றும் புறப்பட்டுத் தென்தேசத்திலுள்ள மயூர பிருந்தாவனத்தையடைந்து ப்ரமஹார மும் பாவனமுமான கைரவிணி புஷ்கரிணியிலே தீர்த்தமாடிச் சகல தாபங்களுமற்றுத் திருவேங்கடத்தான் தனக்குக் கிருபை யாலே சேவைசாதித்தருளும் பார்த்தசாரதி திருகோலமான வேங் கடகிருஷ்ணப் பெருமாளைக் கண்களாரக்கண்டு வாயாரவாழ்த்தி ஆனந்தபாஷ்ப யுக்தனுகிச் ஸாஷ்டாங்க தண்டஞ்சமர்ப்பித்துத் திருப்தியடைந்து, அனந்தரம் க்ஷேத்திரக்யையான வேதவல்லித் தாயாரையும் அவள் நாயகனுன மந்நாதனென்னும் என்னையாளு டையப்பனையும், தெள்ளியசிங்கரையும் சக்ரவர்த்தித் திருமகனுரை யும், கஜேந்திரவரதராஜப் பெருமாளையும் தண்டஞ்சமர்ப்பித்து தீர்த்தப் பிரசாதம் முதலான வரிசைகளையும் பெற்று விமான கோபுரப்பிராகார மண்டபாதி சந்நிதி கைங்கர்யங்களைச் செய்து அனேகமான திருவாபரணங்களைச் சமர்ப்பித்து ஐந்துப்பிரகாரங் களாகச் சேவைசாதித்தருளும் பெருமாள்களுக்கு திரிகால ஆரா தனங்கள் நடக்கும்படியாகச் செய்வித்து ததனந்தரம் பார்த்த சாரதிக்குச் சுபமான ஆவிர்ப்பாவத்தை யுடைத்தான சைத்திர மாதத்திலே பிரம்மோற்சவத்தைச் செய்வித்து ஆனந்தித்துப் பார்த்தசாரதியான வேங்கட கிருஷ்ணஸ்வாமியின் அநுக்ரஹத் தைப்பெற்றுத் தன்பட்டணத்தை யடைந்து திருவேங்கடத்தா னைச் சர்வகாலமும் ஆராதித்துக் கொண்டிருந்தான்.

இந்த வைபவங்களை வாசிக்கின்றவர்கள், கேட்கின்றவர்கள், இஹபரசம்பத்தை யடைந்து வாழ்வார்களென்று நாரதரைப் பார்த்து சிவபிரான் சொன்னுர்.

## கைரவிணி தீர்த்த மஹிமை.

வாரீர் நாரதரே! அந்த பிருந்தாவனத்திற்கும் அல்லித்தாமரை ஹம்ஸாதிகளால் அலங்கிருதமான கைரவிணி தீர்த்தத்திற்கும், காசியும் கங்கையும் சமமாகமாட்டாது. ஜன்மஸஹஸ்ரங்களிலே கங்கையில் ஸ்நானஞ் செய்கின்றதைப் பார்க்கிலும் ஒருகால் கைரவிணி தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்கை விசேஷம். அதற்கு சந்தேஹமில்லை. கங்கையில் ஸ்நானஞ் செய்கின்றவர்கள் புண்ணிய பலன்களையடைந்து புண்ணியம் க்ஷீணமானால் பிறவிசாகரத்தை யடைவார்கள்; கைரவிணியில் தீர்தமாடினால் சித்தமாகப் பாபங்களெல்லாம்போய்ப் பரிசுத்தர்களாகி மோக்ஷத்தை யடைவார்கள். அதன்வைபவத்தை யார்தான்சொல்ல மாட்டுவர்கள்.

வாரீர் நாரதரே! வியாக்ரஜன்மா வானவர் ஶார்த்தூலரை பார்த்துச்சொல்லுகின்றார். ஒருகால் விசுவாவசுவென்னுங் கந்தருவன் ஆகாசமார்க்கத்தில் சஞ்சரித்துக் கொண்டு வருகையில் ஹிமோத்கிரியின் மூன்றுசிகரங்களுள் மேற்கு பாகத்திலுள்ள ஓர் சிகரத்திலிருக்கும் அரஜஸ் என்னுந் தீர்த்தக்கரையில் தபசுசெய்து கொண்டிருந்த, அத்ரிபுத்ரரான தூர்வாசர்மீது அந்தக்கந்தருவன் நிழல்படக்கண்ட தூர்வாசரும் அசரீரியாய் போகக்கடவா யென்று சபித்தனர். அவனும் சாபத்தைப் பெற்றுக் குபேரனையடைய அவன் சிவபிரானைநோக்கித் தபசுசெய்தால் சாபவிமோசனமாகுமென்று சொல்லக்கேட்டு என்னைவந்தடைந்து என்னாலே கைரவிணி தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து சாபவிமோசனமாகி எதாப்ரகாரந் தேஹத்தையடைந்து சுகித்திருந்தான். கார்த்திகை மாதக் கிருஷ்ணபக்ஷத்து அஷ்டமிதிதியில் யாவர் கைரவிணியில் சிராத்தஞ்செய்கின்றார்களோ அவர்களின் பிதுருக்கள் திருப்தியடைந்து மோக்ஷத்தை யடைவார்கள். அந்த கைரவிணி புஷ்கரிணிக்கு உத்தரபூர்வதிக்கில் இந்திரதீர்த்த மொன்றுண்டு. அதில் ஸ்நானஞ்செய்து அசுவதானஞ்செய்யவேண்டும். கைரவிணிக்குத் தெக்ஷிணபாகத்தில் சோமதீர்த்தமொன்றுண்டு. அதில் ஸ்நானஞ் செய்து பால் தயிர் வெண்ணெய் பட்டுவஸதிரம் தானஞ்செய்யவேண்டும். கைரவிணிக்குத் தென்மேற்குதிக்கில் மீனதீர்த்தமொன்றுண்டு அதில் ஸ்நானஞ்செய்து முத்து, பவளம், தேன், நெய்,

தானஞ்செய்யவேண்டும். கைரவிணிக்கு வடமேற்குதிக்கில் அக்னி தீர்த்தமொன்றுண்டு, அதில் ஸ்நானஞ்செய்து அஜதானஞ்செய்ய வேண்டும் கைரவிணிக்கு உத்தரதிக்கில் விஷ்ணுதீர்த்தமொன் றுண்டு, அதில் ஸ்நானஞ்செய்து தானங்களெல்லாஞ் செய்யலாம். இப்படிக் கைரணியைச் சூழ்ந்துள்ள இந்த ஐந்துதீர்த்தங்களும் இஷ்டகாம்யங்களை எல்லாங்கொடுக்கும், உத்தமமான கைரவிணி யானது சர்வாபீஷ்டங்களையுங் கொடுத்து மோக்ஷத்தையுங் கொடுக்கும்.

பூர்வம் கண்ணுவர் புத்திரரான முத்கலரென்பவர் கோகர்ண க்ஷேத்திரத்தில் தபசுசெய்து கொண்டிருக்கையில் கௌஹிலர் முத லான ஐந்து ருஷிகள்வரக்கண்ட முத்கலர் நீங்களெங்கே போகின் றீர் களென்று வினவ, நாங்கள்தபோசித்திக்கு யோக்கியமாகி ரம ணீயமான பிருந்தாவனத்திற்குப் போகின்றோமென்ன ஆகில் நானுங் கூடவருகின்றேனென்று எல்லோருஞ்சேர்ந்து கைரவிணி தீரத்திலுள்ள பிருந்தாவனத்தையடைந்து கைரவிணியில் ஸ்நா னஞ்செய்து தபசுசெய்து கொண்டிருந்தார்கள். இப்படியிருக்க கைரவிணி புஷ்கரணிக்கரையிலே தபசுசெய்து கொண்டிருக்கும் முத்கலரானவர் அந்தக் கைரவிணியிலிருக்கும் அனேகமத்சியங் களின் ஆரவார லீலா விநோதங்களாலே தபோவிக்னமாகின்ற தென்று அந்த மத்ஸியங்களுக்கு நாதனான ஒருபெரிய மீனைப் பார்த்து உங்கள் வம்சங்களிலொன்றாகிலும் இந்த புஷ்கரணியிலிரா மல் உங்களுக்குத்தகுதியான இடத்திற்கு நாளை சூர்யோதயத்திற் குள்ளாகப் போய்ச்சேருங்கோ ளென்று சொல்லித் தபசுசெய்து கொண்டிருந்தார். அனந்தரம் அவராக்யைப்படியே மத்ஸ்யங்க ளெல்லாம் மறுநாள் சூர்யோதயத்திற் குள்ளாகப் போய்விட்டன. ஆகையாலிது பர்யந்தமும் அந்தக் கைரவிணி புஷ்கரணியிலொரு மீனாகிலுங்கிடையாது. பிரமதேவர் கைரவிணி புஷ்கரணியின் மஹாத்மியத்தை வசிஷ்டருக்குச்சொல்லி

அபஹரமமதுரிதானி ப்ரதிரோத்யம்
நிருபமாம்யஸோலக்ஷ்மீம்
பகவதி கைரவிணி த்வாம்ப்ரணமாமி
ஜநார்த்தனப்ரியேஸ்வரூபகே.

ஸ்ரீமந்நாராயணனுக்கு அர்க்கியபாத்யாதியுப சாரங்களுக்கு அர்ஹையாய் அத்தால் ப்ரியையாய்ப் பாக்யவதியா யிருக்கின்ற கைரவிணியே உன்னை தண்டஞ்சமர்ப் பிக்கிறேன் என் ஸகல பாபங்களையும் அபஹரி, உபமானரஹிதையான யசோலக்ஷ்மியை உண்டாக்கு, என்னும் மந்திரத்தையும் உபதேசித்தார்.

இந்தப் பிரகாரம் பிரமஹாணட புராணத்தில் மஹேசுவர நாரதசம்வாதத்தில் திரு அல்லிக்கேணி என்னும் பிருந்தாவன மஹாத்மியத்தில் ஐந்துமூர்த்திகளின் வைபவங்களையும் அவைக ளில் திருவேங்கடத்தானே பார்த்தசாரதி என்னும் வேங்கடகிருஷ் ணனைக் சேவைசாதித்தருளும் பிரகாரத்தையும் கேட்கின்றவர்கள் சர்வாபீஷ்டங்களை யுமடைந்து தேஹாவசான காலத்திலே பரம பதத்தையும்பெற்று வாழ்வார்கள்.

திருவல்லிக்கேணி மஹாத்மியம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

வஞ்சனை செய்யத் தாயுருவாகி
வந்தபேய் அலறிமண்சேர
நஞ்சமர்முலையூடுஉயிர்செகவுண்ட
நாதனைத் தானவர்கூற்றை
விஞ்சைவானவர்சாரணர்சித்தர்
வியந்துதிசெய்யப்பெண்ணுருவாகி
அஞ்சுவை யமுதம் அன்று அளித்தானைத்
திருவல்லிக்கேணிக்கண்டேனே.

இந்திரனுக்கென்று ஆயர்கள்எடுத்த
எழில்விழவில்பழநடைசெய்
மந்திரவிதியில்பூசனைபெறாது
மழைபொழிந்திடத்தளர்ந்து ஆயர்
எந்தம்மோடுஇனவாநிரைதளராமல்
எம்பெருமான் அருளென்ன
அந்தமில்வரையால்மழைதடுத்தானைத்
திருவல்லிக்கேணிக்கண்டேனே

இன்துணைப்பதுமத்து அலர்மகள்தனக்கும்
இன்பன் நற்புவிதனக்குஇறைவன்
தன்துணை ஆயர்பாவைநப்பின்னை
தனக்குஇறை மற்றையோர்க்கெல்லாம்
வன்துணை பஞ்சபாண்டவர்க்காகி
வாயுரைதூதுசென்றியங்கும்
என்துணை எந்தைதந்தைதம்மானைத்
திருவல்லிக்கேணிக்கண்டேனே.

மன்னுதண்பொழிலும்வாவியும்மதிளும்
மாடமாளிகையும்மண்டபமும்
தென்னன்தொண்டையர்கோன்செய்தநல்மயிலைத்
திருவல்லிக்கேணிநின்றானை
கன்னிநல்மாடமங்கையர்தலைவன்
காமருசீர்க்கலிகன்றி
சொன்னசொல்மாலைபத்துடன்வல்லார்
சுகமினிதாள்வர் வானுலகே.

பெரியதிருமொழி. உ-ங-(க-கய)

வந்துதைத்தவெண்திரைகள் செம்பவளம்வெண்முத்தம்
அந்திவிளக்குமணிவிளக்காம்—எந்தை
ஒருவல்லித்தாமரையாள் ஒன்றியசீர்மார்வன்
திருவல்லிக்கேணியான்சென்று.

மூன்றாந்திருவந்தாதி. (கசு)

தாளால் உலகம்அளந்தஅசைவேகொல்?
வாளாகிடந்தருளும் வாய்திறவான்—நீளோதம்
வந்தலைக்கும்மாமயிலை மாவல்லிக்கேணியான்
ஐந்தலைவாய் நாகத்தணை.

நான்முகன்திருவந்தாதி. (ஙரு)

ஸ்ரீ பார்த்தஸாரதிகுருவே நம:

ஸ்ரீவைஷ்ணவ அச்சுக்கூடம், சென்னை.